காலை முரசு

பக்கங்கள் 18

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 மாசி 23 வியாழக்கிழமை 07.03.2024 அதிர்வு 219

## வடக்கில் சூரிய மின்கலத் திட்டத்துக்கு சீனாவுக்கோ, இந்தியாவுக்கோ அனுமதி வழங்கப்படவில்லை


**அமைச்சர் காஞ்சன தெரிவிப்பு**

வடக்கு மாகாணத்தில் சூரிய மின்கலத் திட்டத்துக்கு சீனாவுக்கோ, இந்தியாவுக்கோ அனுமதி வழங்கப்படவில்லை 04▶

# முருகன், ரொபர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகியோரையாவது உயிருடன் விடுதலை செய்து இலங்கைக்கு அனுப்புங்கள்!

**இந்தியப் பிரதமர், தமிழக முதலமைச்சரிடம் சிறீதரன் வேண்டுகோள்**
**சாந்தனின் மறைவுக்கு நாடாளுமன்றத்தில் அஞ்சலி செலுத்தி உரை**



திருச்சி மத்திய சிறையில் உள்ள அகதிகள் சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழர்களான முருகன், ரொபர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகியோரையாவது உயிருடன் விடுதலை செய்து அவர்களுடைய குடும்பத்தோடு அவர்கள் சேர நடவடிக்கை எடுக்குமாறு இந்தியப் பிரதமர், தமிழக முதலமைச்சர் மற்றும் இலங்கை அரசிடம் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் வேண்டுகோள் விடுத்தார்.

இந்தியாவின் முன்னாள் 04▶




# ராஜபக்ஷக்களைப் பாதுகாக்கும் நீங்கள் மக்களுக்குத் தீர்வு வழங்கவேமாட்டீர்கள்

## நாடாளுமன்றில் ரணிலுக்கு சஜித் சூடச் சூடப் பதிலடி

நாட்டைச் சீரழித்தவர்களைப் பாதுகாக்கும் செயற்பாடுகளிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஈடுபடுகின்றார் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரைக்குப் பதில் உரை நிகழ்த்தும்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார். 04▶

# சாந்தன் வர நடவடிக்கை எடுத்தோம்; புற்றுநோயே அவரைப் பலியெடுத்தது

**இப்படிக் கூறுகின்றது இலங்கை அரசு**

குற்றவாளியாக இருந்தபோதும் சாந்தனை அவரின் குடும்பத்தினருடன் இணைக்க இலங்கை அரசு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்தபோதும், புற்றுநோய் அவரைப் பலி கொண்டுவிட்டது என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார். 04▶






அரசியல்வாதிகளுக்குத் தொல்லை பெரும்பாலும் அவர்களின் அல்லக்கைகளினால்தான். அப்படிப்பட்ட ஒரு தகவல் இன்று.

தமிழரசுக் கட்சியின் தலைவர் தேர்தலில் சிறீதரன் வெற்றி பெற்றார் என்ற நிலையில் விவகாரம் நீதிமன்றுக்குப் போனது. 02▶

# வட மாகாண பிரதம செயலாளராக இளங்கோவன் விரைவில் நியமனம்



(ந.லோகதயாளன்)

வடக்கு மாகாண பிரதம செயலாளராகத் தற்போதைய ஜனாதிபதி செயலகத்தின் மேலதிக செயலாளர் எல்.இளங்கோவன் விரைவில் நியமிக்கப்படவுள்ளார்.

வடக்கு மாகாணத்தில் ஆளுநரின் செயலாளர், கல்வி அமைச்சின் செயலாளர் பதவிகளில் பணியாற்றிய நிலையிலும், நீண்ட காலம் தொடர்ச்சியாக வடக்கில் பணியாற்றியவர் என்பதன் அடிப்படையில் கொழும்புக்கு அவர் விடுவிக்கப்பட்டிருந்தார்.

இந்தநிலையில், கடந்த இரண்டு ஆண்டுகளாக ஜனாதிபதி செயலகத்தின் மேலதிக செயலாளராகப் பணியாற்றும் எல்.இளங்கோவன் வடக்கு மாகாண பிரதம செயலாளராக நியமிக்கப்படவுள்ளார். அதேநேரம் தற்போதைய பிரதம செயலாளர் சமன் பந்துலசேனா கொழும்புக்கு மாற்றப்படவுள்ளார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் தேர்வு உட்பட யாவுமே கட்சியின் யாப்பு விதிகளுக்கு அமைய நடைபெறவில்லை என்ற உண்மையை திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கின் முதல் தவணையின் போதே சிறீதரன் உட்பட்ட கட்சி நிர்வாகிகள் ஒப்புக்கொள்ளப் போக, விடயம் அவரின் ஆதரவாளர்களுக்கு உறைப்பாகச் சுட்டிருக்கின்றது.

தலைவர் தெரிவு இடம்பெற்ற பொதுக்குழுக் கூட்டமும் யாப்பு விதிகளுக்கு அமைவானது அல்ல என்பதை சிறீதரனே ஒப்புக்கொண்டமையால், தமது தலைவர் தெரிவைத் தாமே சரியான தெரிவு அல்ல என்பதை அவர் நீதிமன்றத்தில் ஏற்றுக்கொண்டதாகிவிட்டது எனும்உண்மை அல்லக்கைகளை நன்கு சுட்டிருக்கும் போல.

உடனே கட்சி நிர்வாகிகள் நீதிமன்றத்தில் பதிந்த அந்த நிலைப்பாட்டை தமக்கேற்ப அர்த்தம் பண்ணி, வியாக்கியானம் செய்து, முகநூல் பக்கங்களிலும் சமூக ஊடகங்களிலும் பெரும் சண்டப்பிரசண்டமான அறிவிப்புக்களாக அவர்கள் விடுத்தனர்.

அன்று வழக்கு விசாரணை முடிந்து சிறீதரன் தரப்பு நீதிமன்றத்தை விட்டு வெளியே வர முன்னரே, கட்சி நலனுக்காகத் தமது தலைவர் பதவியை துறந்தார் சிறீதரன் என்று, தமது தலைவரைப் பெரும் தியாகியாக்கி அறிவிப்புக்கு மேல் அறிவிப்பு விடுத்தனர் அல்லக்கைகள்.

ஆக, கட்சியின் செயற்பாடுகள், பொதுக்குழுக் கூட்டங்கள், மத்திய குழுக் கூட்டங்கள் என்பன கட்சி யாப்புக்கு அமைய நடக்கவில்லை என்ற உண்மையை சிறீதரன் உட்பட்ட கட்சி நிர்வாகிகள் நீதிமன்றத்தில் ஒப்புக்கொண்டு பதிந்தமையை ஒட்டித்தான் 'தலைவர் பதவி ராஜினாமா!' என்ற அலப்பறை அறிவிப்புகள் அவரின் அல்லக்கைக–ளால் முன்னெடுக்கப்பட்டன.

ஆயினும், கட்சியின் பொதுக்குழுக் கூட்டம் கட்சியின் யாப்பின்படி நடக்கவில்லை என்ற உண்மையை ஒப்புக் கொள்வதன் மூலம் தான் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட பொதுக்குழுக் கூட்டமும் முறையானது அல்ல என்பதை சிறீதரன் ஏற்கின்றார் எனும் உண்மையை அவர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி நீதிமன்றத்தில் கோடி காட்டி இருந்தார் என்பது மறுப்பதற்கில்லை.

அதன் அர்த்தம் பதவியைத் துறக்கும் ராஜினாமாவா அல்லது கட்சிக்கான தியாகமா என்பவை எல்லாம் எனக்குத் தெரியவில்லை.

இனி விடயத்துக்கு வருவோம்.

இந்த அல்லக்கைகளின் செய்திகளைப் பார்த்துவிட்டு சில சிங்கள ஊடகங்கள் 'தமிழரசுக் கட்சியின் தலைவர் பதவியை சிறீதரன் ராஜினாமா செய்துவிட்டார்' என்று செய்தி வெளியிட்டு இருக்கும் போலும்.

சிறீதரனை நாடாளுமன்றத்தில் கண்டபலரே அப்படி நேரடியாக அவரிடம் கேட்டிருக்கின்றனர். அவ்வாறு நேரில் சிறீதரனிடமே கேட்டவர்களில் ஒருவர் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ என்று தெரிகின்றது.

நேற்று பகல் சஜித் பிறிதொரு தமிழ் எம்.பியைச் சந்தித்து இது பற்றிக் குறிப்பிட்டிருக்கின்றார்.

"சிறீதரனிடம் அவர் கட்சித் தலைமைக்குத் தெரிவு செய்யப்பட்ட நிலையில் அவர் அந்தத் தலைவர் பதவியை ராஜினாமாச் செய்து விட்டார் என்று செய்திகள் வெளியாகின்றனவே , உண்மையா? என்று கேட்டேன். அவர் தமக்குத் தெரிந்த விதத்தில் இல்லை என்று கூறிவிட்டுப் போகின்றார். எது உண்மை? அந்த செய்தியா? அல்லது சிறீதரன் கூறுவதா?" – என்று கேட்டிருக்கின்றார் சஜித்.

"அவரிடம்தான் (சிறீதரனிடம்தான்) கேளுங்கள். அவர்களின் கட்சியின் தலைவர் அவரா அல்லது வேறு யாருமா என்பது அவருக்கே தெளிவாகத் தெரியுமோ என்னவோ..? அதற்கு நான் எப்படிப் பதில் கூறுவது? ஆனால், அவர் தான் கட்சித் தலைவர் என்று சற்று முன்னரும் சுமந்திரன்தான் கூறித் திரிகிறார்" – என்று சஜித்துக்குப் பதிலளித்திருக்கின்றார் அந்தத் தமிழ் எம்.பி.

அப்படிச் சுமந்திரன் கூறினாரா என்பது எனக்குத் தெரியவில்லை.

இதற்கிடையில் –

மஹிந்த ராஜபக்ஷவுக்கு நெருக்கமான ஒருவர் நாடாளுமன்றத்தில் இருந்து எனக்கு நேற்றுப் பிற்பகலில் தொலைபேசி அழைப்பு எடுத்தார். அவரும் "சிறீதரன், தமிழரசுத் தலைவர் பதவியை ராஜினாமாச் செய்து விட்டாராமே? உண்மையா?" – என்று கேட்டார். நான் விடயத்தை விளங்கப்படுத்தினேன்.

"ஓ..! அப்படியா? இந்த ஊடகங்கள் செய்கின்ற வேலை பெரும் குழப்பம்" – என்று அலுத்துக் கொண்டார் அவர்.

நான் குறுக்கிட்டேன்.

"இல்லை... இல்லை... அல்லக்கைகள் செய்கின்ற குழப்பம் இது!" – என்றேன் நான்.

"ஓம்..ஓம்.. எனக்கும் புரிகிறது. நான் அந்தச் செய்தியை முதலில் நம்பவில்லை. சற்று முன்னர் நாடாளுமன்றக் கன்ரீனில் சிறீதரன், சுமந்திரன், சார்ல்ஸ் நிர்மலநாதன் மூவரும் ஒரே மேசையிலிருந்து சாப்பிட்டுக் கொண்டு, மிகவும் அன்னியோன்னியமாக உரையாடிக் கொண்டிருக்கின்றமையைக் கண்டேன். பக்கத்து மேசையில் சித்தார்த்தனுடன் மற்றைய இரண்டு தமிழ் எம்.பிக்கள் இருந்தனர். சாப்பிட்டு முடிந்த பின்னர் சுமந்திரன் எழுந்து வந்து சித்தார்த்தனின் மேசையில் இருந்தும் உரையாடினார். அவற்றைப் பார்க்கும்போது சிறீதரன் பதவியை ராஜினாமாச் செய்த தகவல் இட்டுக்கட்டப்பட்டதாக இருக்கும் என்று நினைத்தேன்" – என்றார் அவர்.

"அப்படி கருதாதீர்கள். ஒரு மேசையிலிருந்து சாப்பிட்டபடி, ஒருவர் காலை மற்றவர் இழுத்து விழுத்தும் தமிழ் நண்டுகள் – அதுவும் யாழ்ப்பாணத்து நண்டுகள் – நாங்கள்" என்றேன் நான்.

என் கருத்து விளங்காமலேயே அவர் 'ஆஹா..!' என்று சிரித்தார். நானும் பதிலுக்குத் தொலைபேசியில் சிரித்து வைத்தேன்.

அந்தத் தென்னிலங்கை நண்பருக்கு நண்டுக் கதை தெரியாவிட்டாலும்... வாசக நண்பர்களே, உங்களுக்குத் தெரியும் தானே...!



# கிழக்கு மாகாண முஸ்லிம் எம்.பிக்கள் ஜனாதிபதி ரணிலுடன் முக்கிய சந்திப்பு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் கிழக்கு மாகாண முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பு நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது, அம்பாறை மாவட்ட ஆசிரியர்களின் இடமாற்ற பிரச்சினைகள், கிழக்கு மாகாண சிவில் நிர்வாக சேவை அதிகாரிகளின் நியமனம், கிழக்கு முஸ்லிம்களின் காணிப் பிரச்சினை, காத்தான்குடியில் மூடப்பட்டுள்ள பள்ளிவாசலைத் தொழுகைக்கு அனுமதிக்கும் விவகாரம் மற்றும் கிழக்கு மாகாணத்தின் கல்வி மேம்பாடு தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பில், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், நாடாளுமன்ற உறுப்பினர்களான எச்.எம்.எம். ஹரீஸ், ஏ.எல்.எம். அதாஉல்லா, எம்.சி.பைசால் காசிம், அலி ஸாஹிர் மௌலானா மற்றும் எஸ்.எம்.எம். முஷாரப் ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.




# இரத்தினபுரி நீதிமன்றத்துக்கு அருகில் நேற்று அசிட் வீச்சு!

இரத்தினபுரியில் நபர் ஒருவரை இலக்கு வைத்து அசிட் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதில் மூவர் காயமடைந்து இரத்தினபுரி போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில் –

இரத்தினபுரி மேல் நீதிமன்ற வளாகத்திற்கு அருகில் வைத்தே நேற்று அசிட் வீச்சு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

வாகன விபத்து தொடர்பான வழக்கு ஒன்றிற்காக வந்து கொண்டிருந்த நபரை இலக்கு வைத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், அப்போது வீதியில் பயணித்த இரண்டு சிறுவர்களும் காயமடைந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கடந்த ஆண்டு சிங்களப் புத்தாண்டு தினத்தன்று இரத்தினபுரி கோவில் ஒன்றுக்கு அருகில் இடம்பெற்ற வாகன விபத்தில் உயிரிழந்த இளைஞனின் தந்தையே அசிட் வீச்சின் பிரதான சந்தேகநபர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

அவரை இரத்தினபுரி பொலிஸார் கைது செய்துள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**சீனாவுக்கோ...**

என்று மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று அத்துரலிய ரத்ன தேரர் எம்.பி. முன்வைத்த கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

"வடக்கு மாகாணத்தில் சீன நிறுவனத்துக்குச் சூரிய மின்கலத் திட்டம் வழங்கப்படவும் இல்லை, சீன நிறுவனம் அவ்வாறான கோரிக்கைகள் எதனையும் விடுக்கவும் இல்லை. அதேபோல் வடக்கு மாகாணத்தில் சூரிய மின்கலத் திட்டத்தை முன்னெடுக்க இந்தியாவின் அதானி நிறுவனத்துக்கும் அனுமதி வழங்கப்படவில்லை.

வடக்கில் சூரிய மின்கலத் திட்ட அபிவிருத்தியில் அதானி நிறுவனத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதனால் உற்பத்தி செய்யப்படும் ஒரு மின்னலகுக்கு 50 ரூபா கிடைக்கும் என்று ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளது என்று அத்துரலியே ரத்ன தேரர் எம்.பி குறிப்பிடுகிறார்.

ஊடகங்கள் பொய்யான செய்தியை வெளியிடவில்லை. விமல் வீரவன்ச எம்.பி.யே இந்த விடயத்தை ஊடகங்களுக்குக் கூறியுள்ளார். அதானி நிறுவனம் அவரிடம் தனிப்பட்ட முறையில் இவ்வாறு யோசனைகளை முன்வைத்துள்ளதா என்று தெரியவில்லை அறியவில்லை.

வடக்கு மாகாணத்தில் மின்னுற்பத்தி திட்டத்தை மேம்படுத்த அரசு உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்தது. இதற்கு ஒரு கோடி டொலர் செலவாகும் என மதிப்பிடப்பட்டிருந்தது.

இவ்வாறான நிலையில் வடக்கு மாகாணத்தில் மின்னுற்பத்தித் திட்டத்தை மேம்படுத்த ஒரு கோடி பத்து இலட்சம் டொலர் நிவாரணத்தை வழங்க இந்தியா இணக்கம் தெரிவித்துள்ளது. இதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு விலைமனுகோரல் விடுக்கப்பட்டுள்ளது.

இந்திய நிவாரணத்தால் வடக்கு மாகாணத்தில் அனலைதீவு, நெடுந்தீவு மற்றும் நயினாதீவு ஆகிய தீவுகளில் வாழும் மக்கள் பயனடைவார்கள். இந்தத் திட்டத்துக்கு அரசு ஒரு சதம் கூட செலவழிக்கத் தேவையில்லை. அத்துடன் எதிர்காலத்திலும் செலவழிக்கத் தேவையில்லை. இவ்வாறான நிலையில் இந்தத் திட்டத்தை ஏன் எதிர்க்க வேண்டும்?

மன்னார் காற்றாலை மின்னுற்பத்தியால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படும் என்று ஒரு தரப்பினர் கூறுகின்றார்கள். சுற்றுச்சூழல் மாசுபடுவதாக இருந்தால் காற்றாலைத் திட்டத்தை அதானி நிறுவனத்துக்கு வழங்கினாலும் பாதிப்பு ஏற்படும் தேசிய நிறுவனங்களுக்கு வழங்கினாலும் பாதிப்பு ஏற்படும்.

மன்னார் காற்றாலை மின்னுற்பத்தி திட்டத்தால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுமானால் காற்றாலை மின்னுற்பத்தி வலயத்தில் இருந்து மன்னார் பகுதியை நீக்க வேண்டும். ஒரு தரப்பினர் கூறி அபிவிருத்திச் செயற்பாடுகளுக்குத் தடையாக இருக்கின்றார்கள்." - என்றார்

**முருகன், ரொபர்ட்...**

பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு 30 வருடங்களுக்கு மேலாகச் சிறையில் அடைக்கப்பட்டு 2022ஆம் ஆண்டு விடுதலை செய்யப்பட்டு திருச்சி மத்திய சிறையில் உள்ள அகதிகள் சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சாந்தன் கடந்த 28ஆம் திகதி சென்னையில் உள்ள ராஜீவ் காந்தி அரச வைத்தியசாலையில் திடீரென உயிரிழந்தார்.

சாந்தனுக்காக இலங்கை நாடாளுமன்றத்தில் நேற்று அஞ்சலி செலுத்தி உரையாற்றும்போதே சிறீதரன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இன்றைய நாள் 16 வருடங்களுக்கு முதல் எங்களுடைய மண்ணிலே மாமனிதர் கிட்டினன் சிவநேசன் இலங்கையின் ஆழ ஊடுருவும் படையினரால் கொலை செய்யப்பட்டிருந்தார். இந்த நாடாளுமன்றத்தினுடைய உறுப்பினராக இருந்த சிவநேசன் அநியாயமாகக் கொல்லப்பட்டார்.

இதேவேளை, இந்தியாவிலேயே சிறையில் அடைக்கப்பட்டு பின்னர் விடுதலையாகியும் கூட வீடு வர முடியாமல் சில நாட்களுக்கு முதல் மரணத்தைத் தழுவிக் கொண்ட சாந்தனுக்கும் நான் இந்த இடத்திலே எங்களுடைய அஞ்சலிகளைச் செலுத்திக்கொள்கின்றேன்.

வரலாறு பல மனிதர்களைப் படைக்கின்றது. வரலாறு பல மனிதர்களுக்குப் புதிய பாதைகளைத் திறந்து விடுகின்றது. ஆனால், தன்னுடைய தாயையும், ஊரையும், உறவினரையும் பார்க்க முடியாது 20 வயதில் புறப்பட்ட ஒரு இளைஞன் 53 வயதைக் கடந்து சடலமாகத் தாயகம் வந்துள்ளார்.

நோய் வாய்ப்பட்டிருந்த சாந்தனை இலங்கைக்கு அழைப்பது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியை நானும் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசனும் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தோம்.

அதேபோன்று தமிழகத்தில் உள்ள இந்தியாவுக்கான இலங்கையின் துணை உயர்ஸ்தானிகர் டி.வெங்கடேஷ்வரனையும் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தோம்.

ஆனால், இந்த அனைத்து முயற்சிகளும் தோல்வியில் முடிவடைந்ததால் சாந்தன் சடலமாக இலங்கை வந்துள்ளார்.

இவ்வாறான இழப்புகள் இனியும் தொடரக் கூடாது. திருச்சி மத்திய சிறையில் உள்ள அகதிகள் சிறப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழர்களான முருகன், ரொபர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகியோரையாவது உயிருடன் விடுதலை செய்து அவர்களுடைய குடும்பத்தோடு அவர்கள் சேர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மற்றும் இலங்கையின் அரச அதிகாரிகளிடம் நாம் இந்தக் கோரிக்கையை முன்வைக்கின்றோம்." - என்றார்.

**சாந்தன் வர...**

நாடாளுமன்றத்தில் நேற்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரான நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் உரையாற்றும்போது சாந்தனின் மரணம் தொடர்பில் தெரிவித்த கருத்துக்களைத் தொடர்ந்து தனது கருத்தை முன்வைத்து உரையாற்றும்போதே வெளிவிவகார அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"சாந்தன் இந்தியாவின் முன்னாள் பிரதமரின் கொலையுடன் தொடர்புடைய குற்றவாளியாவார். இந்தியாவிலேயே அவர் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். அவரை இலங்கைக்கு அழைத்து வருவது தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உள்ளிட்ட வடக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கைகளை முன்வைத்திருந்தனர்.

இந்நிலையில், மனிதாபிமான அடிப்படையில் சாந்தனை இலங்கைக்கு அழைத்து வந்து அவரின் உறவினர்களுடன் இணைக்க அரசு முயற்சித்தது. ஆனால், இந்திய அரசிடம் இருந்து சாதகமான பதில்கள் உடனடியாகக் கிடைக்கவில்லை.

இந்நிலையில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்த சாந்தன் உயிரிழந்துவிட்டார். இது இயற்கை மரணமே. இதனால் இந்த விடயத்தை அரசியலுக்குப் பயன்படுத்த வேண்டாம். அனைத்துக்கும் எதிர்ப்புத் தெரிவிக்கும் நிலையில் இருந்து விடுபடுங்கள்." - என்றார்.

**ராஜபக்ஷக்களை...**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஜனாதிபதி உரையாற்றும்போது நரகம் தொடர்பிலும், தொங்கு பாலம் தொடர்பிலும் குறிப்பிட்டார். ஆனால், நரகத்தின் நிறுவுநர்களை நீங்கள்தானே பாதுகாக்கின்றீர்கள். இந்த நாட்டை வங்குரோத்து நிலைக்குக் கொண்டு சென்றவர்களிடமிருந்து நாட்டு மக்கள் நட்டஈட்டைப் பெறுவதைத் தடுத்தது நீங்கள்தானே. நாட்டின் சொத்துக்களைச் கிடைக்கச் செய்யாது இருப்பவரும் நீங்கள்தானே. திருடர்களின் ஆணையில் பதவிக்கு வந்தவர் நீங்களே. நாட்டைச் சீரழித்த ராஜபக்ஷக்கள் அந்தத் தொங்கு பாலத்தில் மேலே வர உதவுபவரும் நீங்களே. உங்களின் செயற்பாடுகளால் 220 இலட்சம் மக்கள் நிர்க்கதியாகியுள்ளனர். நீங்கள் இந்த நாட்டு மக்களுக்கு வழங்கும் தீர்வுதான் என்ன? என்று ஜனாதிபதியிடம் கேட்கின்றேன்.

இதேவேளை, தான் பெரிய தீ பிழம்புக்குள் பாய்ந்துள்ளதாகவே ஜனாதிபதி கூறியுள்ளார். ஆனால், அவர் உண்மையில் பாய்ந்தது தீ பிழம்புக்குள் அல்ல. திருடர்கள் கூட்டத்துக்குள்ளேயே ஆகும். ஒருபோதும் தனக்கு வாக்குகள் மூலம் பெற்றுக்கொள்ள முடியாததைத் திருடர்கள் மூலம் பெற்றுக்கொண்டுள்ளார் ஜனாதிபதி.

ஜனாதிபதி மாதாந்தம் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்கின்றார். நிகழ்நிலைக் காப்புச் சட்டம், பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் மூலம் ஒடுக்குமுறைகளைச் செய்ய அவர் முயற்சிக்கின்றார். சிம்மாசன உரையை ஆற்றும் ஆசையில் அவர் இருக்கின்றார்.

அரசமைப்பு பேரவையை நிறைவேற்றுத்துறையின் பொம்மையாக மாற்ற அவர் முயற்சிக்கின்றார். சபாநாயகருடன் இணைந்து அரசமைப்பைச் சீர்குலைக்கும் நடவடிக்கையிலும் ஜனாதிபதி ஈடுபடுகின்றார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் எந்தக் கருத்தையும் ஜனாதிபதி இப்போது கூறுவதில்லை. தொங்கு பாலத்தில் ஏறி மேலே வந்தவர்கள் நாட்டைச் சீர்குலைத்த ராஜபக்ஷ குழுக்களே ஆகும்.

எவ்வாறாயினும் மக்கள் எதிர்பார்க்கும் தீர்வை ஐக்கிய மக்கள் சக்தி தயாரித்துள்ளது. பொருளாதார முன்னேற்றம் தொடர்பான வேலைத்திட்டத்தையே எதிர்பார்த்துள்ளோம். அனைவரையும் இணைத்து அனைவரும் நன்மையடையும் பொருளாதார வளர்ச்சியையே எதிர்பார்க்கின்றோம்." - என்றார்



# ஆறு நாடுகளின் தூதுவர்கள் அநுர குமாரவுடன் சந்திப்பு

ஆறு நாடுகளின் தூதுவர்கள் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்கவைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையகத்தில் நேற்றுப் பிற்பகலில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.



பாலஸ்தீனத்தின் தூதுவர் Zuhair M.H. Dar Zaid, துருக்கி குடியரசின் தூதுவர் திருமதி R. Demet Sekercioglu, பங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் வுயசநங M.D. Ariful Islam, இந்தோனேசிய தூதுவர் Dewi Gustina Tobing, மலேசிய உயர்ஸ்தானிகர் Badli Hisham Bin Adam மற்றும் மாலைதீவு பதில் தூதுவர் திருமதி Fathimath Ghina ஆகிய இராஜதந்திரிகள் இந்தச் சந்திப்பில் பங்கேற்றுள்ளனர்.

தேசிய மக்கள் சக்தியின் சார்பில் தேசிய நிறைவேற்றுப்பேரவை உறுப்பினர் பிமல் ரத்நாயக்க, தேசிய நிறைவேற்றுப் பேரவை உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸ, தேசிய நிறைவேற்றுப் பேரவை உறுப்பினர் றிஷ்வி சாலி மற்றும் தேசிய நிறைவேற்றுப்பேரவை உறுப்பினர் முதித்த நாணாயக்கார ஆகியோர் கலந்துகொண்டனர்.



# ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் ஒழுங்கு செய்த மகளிர் தின நிகழ்வு

ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரம் ஏற்பாட்டில் கொழும்பு-07 இல் அமைந்துள்ள லக்ஷ்மன் கதிர்காமர் மண்டபத்தில் "இஸ்லாமிய சமூகத்திலும் மேற்கத்திய சமூகத்திலும் பெண்களும் குடும்பமும்" எனும் தொனிப்பொருளில் நடைபெற்ற மகளிர் தின சிறப்பு நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் தலைவர் அல்ஹாஜ் என்.எம்.அமீனுக்கு கலாபூஷணம் பரீட் இக்பால் பொன்னாடை அணிவித்து கௌரவிப்பதை படத்தில் காணலாம். அருகில் இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்த முன்னாள் அமைச்சர் பேரியல் அஷ்ரப்பையும் காணலாம்.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# ரணிலின் மாற்றம்

பொதுத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் இரண்டையும் தாம் எதிர்கொள்ள வேண்டும் என்ற யதார்த்தம் - கட்டாய நிலைமை - ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குப் புரியத் தொடங்கிவிட்டது. அதன் சூடு, தகிப்பு அவருக்கு விளங்குகின்றது.

அதனால் இதுவரை நிறைவேற்றதிகார ஜனாதிபதிப்பதவி என்ற வலிமையைப் பயன்படுத்திக் கொண்டு அரசியல் பந்தாட்டத்தை விளயாடிக் கொண்டிருந்த அவருக்கு, இம்முறைமை இனிச் சரிப்பட்டு வராது, எப்படியும் இணக்க அரசியல் செய்தாக வேண்டும், தரப்புக்களைத் தம்பக்கம் வளைத்துப் போட்டாக வேண்டும் என்ற நிஜ நிலைமை நன்கு புரியத் தொடங்கியிருக்கின்றது. நிலைமை அவருக்கு உறைப்பாக உறைக்கத் தொடங்கியிருக்கின்றது.

அதனால் மெல்ல அரசியல் அரவணைப்பு வேலைகளையும் இப்போது ஆரம்பித்திருக்கின்றார். அந்த வகையில் சிறுபான்மை மக்களின் மீது அவரின் கவனம் திரும்பத் தொடங்கி இருக்கின்றது.

எது, எப்படி என்றாலும் சோழியன் குடுமி சும்மா ஆடவில்லை என்பது தெளிவு.

நேற்றுத் தமிழ்க் கட்சிகளின் எம்.பிக்களையும், முஸ்லிம் கட்சிகளின் எம்.பிக்களையும் தனித்தனியாக அவர் அழைத்துப் பேசியிருக்கின்றார்.

வழமை போல தமிழ்க் கட்சிகளின் எம்.பிக்கள் கூட்டத்தில் அவர்களுடன் முரண்டுபடும் நிலைமை ஏற்பட்ட போதிலும், மோதிக்கொள்ளும் எதிர்ப்பு முரண்பாடுகளை நீடிக்காமல் ஜனாதிபதி தவிர்த்துக் கொண்டார் என்றும் கூறப்படுகின்றது.

அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளாத இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ் மாவட்ட எம்.பியான சுமந்திரனை பின்னர் தனியாக அழைத்து, அதிகாரப் பரவலாக்கலோடும் சட்டத்தோடும் சம்பந்தப்பட்ட சில விடயங்களை அவர் விரிவாகக் கலந்துரையாடி இருக்கின்றார் எனத் தெரிய வருகின்றது.

அதிகாரப் பரவலாககளுக்கான அலகாக மாகாண சபை முறைமை கொண்டு வரப்பட்ட போதிலும், அதில் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட பொலிஸ், காணி அதிகாரங்கள் இன்னும் நடைமுறையில் பகிரப்படவில்லை என்பது தெரிந்ததே.

இதில் காணி அதிகாரங்களை உடனடியாக மாகாண சபைகளுக்கு விடுவிப்பது குறித்து சுமந்திரனுடன் ரணில் விரிவாகக் கலந்தாலோசித்திருக்கின்றார்.

காணி அதிகாரங்களை மாகாணங்களுக்கு பகிர்வதாயின், அதற்காகச் சட்டம் ஒன்றின் மூலம் காணி ஆணைக் குழு அமைக்கப்பட்டு, அதனூடாகவே அந்த அதிகாரப் பகிர்வு முன்னெடுக்கப்பட வேண்டும். அத்தகைய ஆணைக்குழுவை நிறுவுவதற்கான சட்டமூலத்தின் வரைவு தயாராக இருப்பதாகவும், அதனை படித்து, ஆராய்ந்து பொருத்தமானதா, சரியானதா என்பதைத் தமக்கு உறுதிப்படுத்துமாறும் சுமந்திரனிடம் ஜனாதிபதி ரணில் கேட்டுக் கொண்டிருக்கின்றார் எனத் தெரிகிறது.

அதிகாரப் பகிர்வு விடயத்தில் மாகாண சபைகளுக்கு உரிய அதிகாரங்கள், மத்திய அரசுக்கு உரிய அதிகாரங்கள், இரண்டுக்கும் பொதுவானவை என்று மூன்று பட்டியல்கள் 13ஆம் திருத்தத்தில் உண்டு. இதில் பொதுவான அதிகாரப் பட்டியலை நீக்குவதற்கு ஜனாதிபதி ரணில் விரும்புகின்றார். அப்படி செய்வது வீண் குழப்பங்களைத் தவிர்க்கும் என்று ரணில் கருதுகின்றார். இப்போது பொது பட்டியலில் உள்ள கணிசமானவற்றை மாகாண சபைகளுக்கு வழங்கி விடலாம், எஞ்சியவற்றை மத்திய அரசுடன் இணைத்து விடலாம் என்ற கருத்தையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

பல்கலைக்கழக கல்வி போன்ற விடயங்களை மத்திய - மாகாண அரசுகள் இரண்டுமே கையாள முடியும் என்பதால் உயர்கல்வித்துறை அதிகாரத்தை மத்திய அரசின் அதிகாரப் பட்டியலிலும் மாகாண அரசின் அதிகாரப் பட்டியலிலும் சேர்க்கலாம் என்ற யோசனையையும் அச்சந்திப்பின் போது சுமந்திரனிடம் ஜனாதிபதி விக்கிரமசிங்க தெரிவித்திருக்கின்றார் என அறிய வந்தது.

இதே கருத்துக்கள் குறித்து முன்னதாக நேற்று நண்பகல் தமிழ் எம்.பிக்களுடனான கலந்துரையாடலிலும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார் எனவும் அறிய வந்தது.

எனினும் 13 ஆவது திருத்தத்தின் அதிகார பட்டியலில் மாற்றம் செய்வது அரசமைப்பு திருத்தம் என்பதால் அதை முன்னெடுப்பதற்கு குறைந்தபட்சம் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை ஆதரவு அரசுக்கு அவசியம்.

அதைத் திரட்டக் கூடிய நிலையில் ரணில் விக்கிரமசிங்க இருக்கின்றாரா என்ற கேள்வியும் உண்டு.

ஆயினும் தேர்தல்கள் நெருங்கி வரும் சமயத்தில் சிறுபான்மை தரப்புகளுடன் சமரசம் செய்வதற்கு ஜனாதிபதி ரணில் விரும்புகின்றார் என்பது மட்டும் துலாம்பரமாய் வெளிப்படுகின்றது.



# மன்னார் காற்றாலை மின் உற்பத்தி திட்டம் தொடர்பான பிரதேச மக்களின் அபிப்பிராயங்கள் நேற்றுக் கையளிப்பு

(மன்னார் நிருபர்: எஸ்.றொசேரியன் லெம்பேட்)

மன்னாரில் முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ள 250 மெகா வோல்ட் காற்றாலை மின் உற்பத்தி திட்டத்தின் 2ஆம் கட்ட நடவடிக்கைக்கான மக்களின் அபிப்பிராயங்கள் மற்றும் கோரிக்கைகள் மன்னார் பிரதேசச் செயலகத்தில் நேற்றைய தினம் புதன்கிழமை மதியம் கையளிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் கடந்த மாதம் முன் வைக்கப்பட்ட 250 மெகா வோல்ட் காற்றாலை மின் உற்பத்தி வேலைத்திட்டத்தின் 2 ஆம் கட்ட திட்டம் தொடர்பான இறுதி சுற்றறிக்கையே இவ்வாறு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை மாக்கஸ் அடிகளார் தலைமையிலான குழுவினர் இதனைக் கையளித்துள்ளனர்.

இந்தக் காற்றாலையினாக் ஏற்படும் விளைவுகள் தொடர்பான மக்களின் கருத்துக்களே இவ்வாறு கையளிக் கப்பட்டுள்ளன.

காற்றாலை மின் உற்பத்தியினால் ஏற்படும் விளைவுகள்



தொடர்பான மக்களின் கருத்துக்கள் மற்றும் இந்தத் திட்டத்திற்கு மக்களின் எதிர்ப்புகள் தொடர்பான விவரங்களும் அவர்களின் கடிதம் மற்றும் கையெழுத்துக்களும் இவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன

இத் திட்டத்தை மக்கள் எதிர்க்க வில்லை எனவும், இத்திட்டத்தை மக்களை பாதிக்காத வகையில் மன்னார் தீவில் இருந்து பிறிதொரு இடத்தில் முன்னெடுக்குமாறும் மக்கள் கோரிக்கை முன் வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சர்ச்சைக்குரிய மருந்துக் கொள்வனவு; சமன் ரத்நாயக்க இரகசிய வாக்குமூலம்



விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் சமன் ரத்நாயக்க, மாளிகாகந்த நீதவானிடம் 4 மணி நேர இரகசிய வாக்குமூலம் ஒன்றை வழங்கியுள்ளார்.

சர்ச்சைக்குரிய மருந்துக் கொள்வனவு தொடர்பிலேயே வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டுள்ளது.

சமன் ரத்நாயக்க கடந்த 4 ஆம் திகதி இரகசிய வாக்குமூலம் வழங்குவதற்காக நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்ட போதிலும், சுமார் அரை மணித்தியாலத்தின் பின்னர் அவர் மீண்டும் மஹர சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் சமன் ரத்நாயக்க எதிர்வரும் 14 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.



# மலையக மரக்கறி வகைகளின் விலைகள் பாரியளவில் வீழ்ச்சி

(மஸ்கெலியா நிருபர்: செ.தி.பெருமாள்)

மலையக மரக்கறிகளின் விலைகள் பாரியளவில் வீழ்ச்சியடைந்து வருகின்றன என நுவரெலியா விசேட பொருளாதார மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

கடந்த காலங்களில் மொத்த மற்றும் சில்லறை விலைகளில் பெருமளவில் அதிகரித்திருந்த மலையக மரக்கறிகளின் விலைகள் தற்போது வழமை நிலையை அடைந்துள்ளன என நுவரெலியா விசேட பொருளாதார மத்திய நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மலையகத்தில் நிலவும் நல்ல காலநிலை காரணமாக திட்டமிட்டபடி அறுவடை கிடைத்துள்ளது.

எதிர்வரும் தமிழ் - சிங்களப் புத்தாண்டு காலம் வரை இந்நிலை தொடரும் என அந்த அதிகாரி தெரிவித்தார்.

காய்கறிகளின் விலையேற்றம் காரணமாக காய்கறிகளை உட்கொள்வதில் இருந்து விலகியிருந்த நுகர்வோர் இன்னும் காய்கறிகளை சரியாக உட்கொள்ளத் தூண்டவில்லை என்றும். முன்னர் தனது மையத்தில் நாளொன்றுக்கு 120,000 கிலோ முதல் 140,000 கிலோ வரை காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டு வந்ததாகவும், அந்த அதிகாரி தெரிவித்தார்.

இந்த நாள்களில் இது குறைந்து 60,000 கிலோ முதல் 70,000 கிலோ காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

முட்டைகோஸ் கிலோ ரூ.320, கேரட் கிலோ ரூ.270, வெண்டைக்காய் கிலோ ரூ.220, பீட்ரூட் (இலையுடன்) கிலோ ரூ.220, பீட்ரூட் (இலைகள் இல்லாமல்) கிலோ ரூ.270, உருளைக் கிழங்கு கிலோ ரூ.340, கறி மிளகாய் கிலோ ரூ.600, காலிஃபிளவர் கிலோ ரூ.600, கோவா கிலோ ஒன்று ரூ.200 ஆகவும், தக்காளி கிலோ ரூ.300 ஆகவும் நேற்றுப் புதன் கிழமை நுவரெலியா சிறப்பு பொருளாதார மையத்தில் மொத்த விலையாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சிறப்பு முகாமில் உள்ள முருகன், பயஸ், ஜெயக்குமாரை விடுவிக்கக் கோருகிறது ஜனநாயகப் போராளிகள் கட்சி

(கே.வசந்தன்)

முருகன், றொபேட்டயஸ், ஜெயக்குமார் ஆகியோரை விரைந்து சிறப்பு முகாம்களில் இருந்து விடுவித்துத் தாயகம் திரும்ப ஆவன செய்ய வேண்டும் என இந்திய மத்திய, மாநில அரசுகளை எமது மக்களின் சார்பில் தாம் கேட்டுக் கொள்கிறார் என ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் சி.வேந்தன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் நேற்று அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தசாப்தங்கள் கடந்தும் ஈழத்தமிழர்களது நியாயங்களையும் அறைகூவல்களையும் இந்தியா புரிந்துகொள்ள வேண்டும் என தமிழினம் கருதுகிறது. ஈழத்தமிழர்களதும், இந்தியாவினதும் சமூக, அரசியல், பொருளாதார, பாதுகாப்பு உறவு நிலைகள் பன்னெடுங்கால வரலாற்றுக்கு உரியவை. அந்த உரித்தின் அடிப்படையில்தான் இலங்கை - இந்திய ஒப்பந்தம் உருவானது.

இந்தியா தனது பிராந்தியத்தின் நலன் மற்றும் ஈழத்தமிழினத்தின் பாதுகாப்பு, அரசியல் உரிமை என்பவற்றை கருத்தில் கொண்டே தனது முழுமையான பலத்தின் திரட்சியின் அடிப்படையில்தான் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தையும் இலங்கை யில் தனது படைத்தரையிறக்கத்தையும் நிகழ்த்தியிருந்தது.

அதற்கு பின்னரான சில கசப்பான அசாதாரணமான நிகழ்வுகள் இந்திய - ஈழத்தமிழர்களது உறவு நிலைகளில் இடைவெளியினை ஏற்படுத்தி இறுதியில் சிறிபெரும் புத்தூரில் ஏற்படுத்தப்பட்ட துன்பியல் நிகழ்வினை அடுத்து ஈழத்தமிழர்களை இந்தியா முற்று முழுதாகக் கைவிட்டுவிட்டது.

எங்கு எமக்கும் இந்தியாவிற்குமான உறவுநிலை கைவிட்டுபோனதோ அங்கிருந்துதான் அவ்வுறவு நிலை தொடங்கப்பட வேண்டும் என நாங்களும் எமது மக்களும் கருதுகிறோம். சிறீபெரும்புதூரின் வழக்குகளில் தண்டனை பெற்று இந்திய நீதிமன்றங்களினால் விடுவிக்கப்பட்ட ஈழத்தமிழர்களான முருகன், றொபேட் பயஸ், ஜெயக்குமார் ஆகியோர் விரைந்து சிறப்பு முகாம்களில் இருந்து விடுவித்துத் தாயகம் திரும்ப ஆவண செய்ய வேண்டும் என இந்திய மத்திய, மாநில அரசுகளை எமது மக்களின் சார்பில் கேட்டுகொள்கிறோம். - என அவந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# சர்வதேச மகளிர் தினத்தை ஒட்டி சாவகச்சேரியில் உள்ளூர் உற்பத்திக் கண்காட்சியும் விற்பனையும்!

## சாவகச்சேரியில் நேற்றும் இன்றும் நடைபெறுகின்றன

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு வடக்கு மாகாண சபையின் மகளிர் விவகார அமைச்சு நடத்துகின்ற உள்ளூர் உற்பத்தி கண்காட்சியும் விற்பனையும் நேற்றைய தினம் சாவகச்சேரியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சாவகச்சேரி நகர சபையின் பொன் விழா மண்டப வளாகத்தில் கண்காட்சி விற்பனைக் கூடாரங்கள் அமைக்கப் பட்டுள்ளன.

இக்கண்காட்சிக் கூடத்தை வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் சமன் பந்துலசேன உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்..

இக்கண்காட்சிக் கூடத்தில் வடக்கு மாகாணத்துக்கு உட்பட்ட சுயதொழில் உற்பத்திகளை மேற்கொள்ளுகின்ற மகளிரின் உற்பத்தி பொருள்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

அதே நேரம் பொன்விழா மண்டபத்தில் வடக்கு மாகாணத்தில் அனைத்து துறைகளிலும் மகுடம் சூடிய பெண்கள் கௌரவிக்கப்படுகின்ற நிகழ்வும் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது.

மகளிர் தின கண்காட்சியும் விற்பனையும் இன்றும் தொடர்ச்சியாக இடம்பெறும் என வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சு அறிவித்துள்ளது.




















# அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் நீர்த்தாரைப் பிரயோகம்

## புஞ்சி பொரளை பகுதியில் சம்பவம்; இருவர் கைது

அனைத்துப் பல்கலைக் கழக மாண வர்களின் எதிர்ப்பு நடவடிக்கையை கலைப்பதற்கு பொலிஸார் நீர்த்தாரைப் பிர யோகம் மேற்கொண்டுள்ள னர்.

புஞ்சி பொரளை பகுதியில் வைத்து நீர்தாரைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நீர்த்தாரொ பிரயோகத்தை யும் பொருட்படுத்தாத மாணவர் கள் கொழும்பு தேசிய வைத் தியசாலைக்கு முன்பாக ஒன்று திரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இலவசக் கல்வி – இலவச சுகாதாரம் உள்ளிட்ட பொது மக்களின் உரிமைகள் பறிக் கப்படுவதைக் கண்டித்து நேற்று இந்தப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. இல வசக் கல்வியைத் தனியார் மயப்படுத்தும் தேசியக் கல்விக் கொள் கையை மீளப்பெறுமாறு அரசாங்கத்தை வலியுறுத்தி பல்கலைக்கழக மாணவர் கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது அனைத்துப் பல் கலைக்கழக மாணவர் ஒன்றி யத்தின் ஏற்பாட்டாளர் மது ஷான் சந்திரஜித் மற்றும் சப் ரகமுவ பல் கலைக்கழகத்தைச் சேர்ந்த மற்றுமொரு மாணவர் கைது செய்யப்பட்டிருந்தனர் எனப் பொலிஸ் ஊடகப்பேச் சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித் துள்ளார்.

கொழும்பு தேசிய வைத்திய சாலைக்கு முன்பாக சில மணித்தியாலங்கள் ஆர்ப்பாட் டத்தில் ஈடுபட்ட மாண வர்கள் பின்னர் அங்கிருந்து கலைந்து சென்றனர்.



# ஹரக் கட்டாவை மேலும் 5 நாள்கள் விசாரணைக்கு உட்படுத்த அனுமதி!

திட்டமிடப்பட்ட குற்றச் செயல்களுடன் தொடர்புடைய ஹரக் கட்டா எனப்படும் நதுன் சிந்தக்க மேலும் 5 நாள்களுக்குத் தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளார் எனக் குற் றப்புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில், கொழும்பு கோட்டை நீதிவான் திலின கமகேவுக்கு அறி விக்கப்பட்டுள்ளது என அந்தத் திணைக் களம் குறிப்பிட்டுள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ், அவரை ஒரு வருடத்துக்கு தடுத்து வைத்து விசாரிக்க முடியும் எனவும் 90 நாள்கள் என்ற அடிப்படையில் அடுத் தடுத்துப் பெற்றுக்கொள்ளப்பட்ட தடுப்பு காவல் விசாரணை உத்தரவுக் கமைய, அவர் 360 நாள்கள் விசாரிக்கப்பட்டு வருகின்றார்.

அதன்படி, மேலும் 5 நாள்கள் தடுத்து வைத்து கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகள் நீதி மன்றில் தெரிவித்துள்ளனர்.






# மன்னார் பள்ளிமுனைக் கிராம மீனவர்கள் நேற்றுக் காலை கவனவீர்ப்புப் போராட்டம்

**(மன்னார் நிருபர்: எஸ். றொசேரியன் லெம்பேட் )**

மன்னார் பள்ளிமுனை கிராம மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு துரித நடவடிக்கைகளை முன்னெடுக்க கோரி அந்தக் கிராம மக்களை நேற்றுப் புதன்கிழமை காலை கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

பள்ளிமுனை புனித லூசியா மீனவர் கூட்டுறவு சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் பள்ளிமுனை மீன் சந்தை கட்டடத் தொகுதிக்கு முன் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் ஆரம்பமானது.

போராட்டத்தில் பள்ளிமுனை பங்குத் தந்தை. அந்தக் கிராம மீனவர்கள் என பல நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டனர்.

கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மன்னார் மாவட்டச் செயலகம் வரை அமைதியான முறையில் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு சென்றனர்.

இதன் போது பள்ளிமுனை கிராம மீனவர்கள் தமது வாழ்வாதாரத்தையும் தமக்கான இடங்களையும் தக்கவைப்பதில் பல்வேறு இடையூறுகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் எனத் தெரிவித்தனர்.

மேலும் மன்னார் சௌத்பார் மீன்பிடி துறையில் மீனவர்கள் தமது வாழ்வாதாரம் மற்றும் மீன் பிடி எல்லை பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் என்றும் தெரிவித்தனர்

மேலும் குறித்த மீனவர்கள் முந்தல் காணி எல்லை மற்றும் பாரம்பரிய வழிபாட்டு உரிமைகள் பாதிக்கப்பட்டுள்ளமை மற்றும் சிறு தொழில் மீனவர்களின் தொழில் நடவடிக்கைகளுக்கு இடைஞ்சலாக அமைக்கப்பட்டுள்ள கரையோர கடலட்டை பண்ணை போன்றவற்றை அகற்றுதல் உள்ளிட்ட கோரிக்கைகளை முன் வைத்து இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்தப் பிரச்சினைகள் குறித்து ஏற்கனவே மன்னார் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டு துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்ட போதும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் முன்னெடுக்கப் படவில்லை என அந்தக் கிராம மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

போராட்டத்தின் பின் தமது கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றை அவர்கள் மன்னார் மாவட்ட உதவி அரசாங்க அதிபரிடம் கையளித்தனர்.












# பெறுமதி சேர் வரி திருத்தச் சட்டமூலம் மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றம்

திருத்தங்களுடன் கூடிய பெறுமதி சேர் வரித் திருத்தச் சட்டமூலத்தின் மூன்றாவது வாசிப்பு நேற்று நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.


இந்த சட்டமூலத்திற்கு ஆதரவாக 59 வாக்குகளும் எதிராக 35 வாக்குகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

நாடாளுமன்றத்தில் நேற்று பெறுமதி சேர் வரி, சமூக அறவீட்டு வரி உள்ளிட்ட வரி சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதம் இடம்பெற்றது.

இதன்போது பெறுமதி சேர் வரி சட்டமூலத்துக்கு சபை அனுமதி வழங்குகிறதா என சபாநாயகர் வினவிய போது ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன வாக்கெடுப்பை கோரினார்.

அதன் பிரகாரம் வாக்களிப்பு கோரப்பட்ட போது பெறுமதிசேர் வரி (திருத்தச்) சட்டமூலத்துக்கு ஆதரவாக 59 வாக்குகளும், எதிராக 35 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

அதன்படி, 24 மேலதிக வாக்குகளால் திருத்தங்களுடன் கூடிய பெறுமதி சேர் வரி திருத்தச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது.



| | | | | | |
|---|---|---|---|---|---|
| G 001. Pavithradevi Wanniarachchi | Yes | G 079. Jayantha Ketagoda | Yes | O 034. Anura Priyadharshana Yapa | Yes |
| G 006. Susil Premajayantha | Yes | G 082. U. K. Sumith Udukumbura | Yes | O 042. Vadivel S[illegible] | Not Voted |
| G 007. Dinesh Gunawardena | Yes | G 085. Akila Ellawala | Yes | O 044. Ashok Abeysinghe | No |
| G 009. Douglas Devananda | Yes | G 088. Nalaka Bandara Kottegoda | Yes | O 047. Ajith Mannapp[illegible] | No |
| G 016. Vidura Wickramanayaka | Yes | G 090. Kokila Gunawardene | Yes | O 048. Buddhika Pathirana | No |
| G 019. Tiran Alles | Not Voted | G 092. Kulasingam Dhileeban | Yes | O 050. Nalin Bandara Jayamaha | No |
| G 020. Nalin Fernando | Yes | G 094. Isuru Dodangoda | Yes | O 051. Hector Appuhamy | Not Voted |
| G 021. Ajith Rajapakse | Yes | G 097. Muditha Prishanthi | Yes | O 052. Thushara Indunil Amarasena | Not Voted |
| G 023. Ranjith Siyambalapitiya | Yes | G 105. Rajika Wickramasinghe | Yes | O 053. Dilan Perera | No |
| G 024. Jagath Pushpakumara | Yes | G 106. M. W. D. Sahan Pradeep Withana | Yes | O 057. Harini Amarasuriya | No |
| G 027. Janaka Wakkumbura | Yes | G 107. Madhura Withanage | Yes | O 061. Velu Kumar | No |
| G 028. Shehan Semasinghe | Yes | G 111. Yadamini Gunawardena | Not Voted | O 062. Kavinda Heshan Jayawardhana | No |
| G 032. Lasantha Alagiyawanna | Not Voted | G 112. Manjula Dissanayake | Not Voted | O 063. Mayantha Dissanayake | No |
| G 033. Rohana Dissanayaka | Yes | O 006. Gayantha Karunatilleka | No | O 064. K. Sujith Sanjaya Perera | No |
| G 035. Arundika Fernando | Yes | O 007. Lakshman Kiriella | No | O 066. Imran Maharoof | No |
| G 038. Tharaka Balasuriya | Yes | O 008. Sajith Premadasa | No | O 070. Hesha Withanage | No |
| G 045. Piyal Nishantha De Silva | Yes | O 010. Patali Champika Ranawaka | No | O 071. Waruna Liyanage | No |
| G 047. D. B. Herath | Yes | O 013. Maithreepala Sirisena | No | O 072. M. Udayakumar | No |
| G 052. Asoka Priyantha | Yes | O 015. G.L. Peiris | No | O 075. Chandima Weerakkody | No |
| G 053. A. Aravindh Kumar | Yes | O 016. Anura Dissanayaka | No | O 081. W. H. M. Dharmasena | No |
| G 055. Suren Raghavan | Yes | O 017. A. L. M. Athaullah | Yes | O 082. Kins Nelson | Not Voted |
| G 058. Chamara Sampath Dasanayake | Yes | O 028. R. M. Ranjith Madduma Bandara | Not Voted | O 083. Rohana Bandara | No |
| G 059. Anupa Pasqual | Not Voted | O 029. Dilip Wedaarachchi | No | O 089. Nimal Lanza | Yes |
| G 062. Gamini Lokuge | Not Voted | O 030. Niroshan Perera | No | O 092. Sarathie Dushmantha | No |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| G 001. Pavithradevi Wanniarachchi | Not Voted | G 106. M. W. D. Sahan Pradeep Withana | Yes | O 072. M. Udayakumar | No |
| G 006. Susil Premajayantha | Yes | G 107. Madhura Withanage | Yes | O 075. Chandima[illegible]kkody | No |
| G 007. Dinesh Gunawardena | Yes | O 006. Gayantha Karunatilleka | No | O 081. W. H. M. Dharmasena | Not Voted |
| G 009. Douglas Devananda | Yes | O 007. Lakshman Kiriella | No | O 082. Kins Nelson | Not Voted |
| G 016. Vidura Wickramanayaka | Yes | O 008. Sajith Premadasa | No | O 083. Rohana Bandara | No |
| G 020. Nalin Fernando | Yes | O 010. Patali Champika Ranawaka | No | O 089. Nimal Lanza | Yes |
| G 023. Ranjith Siyambalapitiya | Yes | O 013. Maithreepala Sirisena | No | O 092. Sarathie Dushmantha | No |
| G 024. Jagath Pushpakumara | Yes | O 015. G.L. Peiris | No | O 101. S. Jagath Samarawickrama | Yes |
| G 027. Janaka Wakkumbura | Yes | O 016. Anura Dissanayaka | No | | |
| G 028. Shehan Semasinghe | Yes | O 017. A. L. M. Athaullah | Yes | | |
| G 033. Rohana Dissanayaka | Yes | O 029. Dilip Wedaarachchi | Not Voted | | |
| G 045. Piyal Nishantha De Silva | Not Voted | O 030. Niroshan Perera | No | | |
| G 047. D. B. Herath | Not Voted | O 031. Eran Wickramaratne | No | | |
| G 052. Asoka Priyantha | Yes | O 032. J. C. Alawathuwala | No | | |
| G 055. Suren Raghavan | Yes | O 034. Anura Priyadharshana Yapa | Yes | | |
| G 058. Chamara Sampath Dasanayake | Yes | O 044. Ashok Abeysinghe | No | | |
| G 075. Kapila Athukorala | Not Voted | O 047. Ajith Mannapperuma | No | | |
| G 078. S. C. Muthukumarana | Not Voted | O 048. Buddhika Pathirana | No | | |
| G 079. Jayantha Ketagoda | Yes | O 050. Nalin Bandara Jayamaha | No | | |
| G 082. U. K. Sumith Udukumbura | Yes | O 052. Thushara Indunil Amarasena | Not Voted | | |
| G 085. Akila Ellawala | Yes | O 053. Dilan Perera | No | | |
| G 088. Nalaka Bandara Kottegoda | No | O 057. Harini Amarasuriya | No | | |
| G 090. Kokila Gunawardene | Yes | O 062. Kavinda Heshan Jayawardhana | Not Voted | | |
| G 094. Isuru Dodangoda | Yes | O 064. K. Sujith Sanjaya Perera | Not Voted | | |





# தேசிய கல்விக் கட்டமைப்பு திட்டம் தொடர்பில் துறைசார் மேற்பார்வைக் குழு கலந்துரையாடல்

எதிர்வரும் 2033 ஆம் ஆண்டு வரையிலான தேசியக் கல்விக் கொள்கைக் கட்டமைப்புத் திட்டம் தொடர்பில், மூன்றாவதும் நான்காவதும் கலந்துரையாடல்களை, கல்வி தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழு நடத்தியுள்ளது.

இந்தக் கலந்துரையாடல், கல்வி தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது தேசியக் கல்விக் கொள்கைக் கட்டமைப்பு திட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள் மற்றும் அதில் உள்ளடக்கப்பட வேண்டிய புதிய விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

அத்துடன், தேசியக் கல்வியின் எதிர்காலத் திட்டங்கள் மற்றும் முன்னெடுக்க எதிர்பார்க்கப்படும் முக்கிய மாற்றங்களின் சுருக்கம் பற்றிய பல்வேறு அம்சங்கள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.












# புதுச்சேரி சிறுமி கொலை வழக்கு: கைதானவர்களிடம் தீவிர விசாரணை




புதுச்சேரி சிறுமி கொலை வழக்கில் முழு விசாரணை நடத்த சிரேஷ்ட எஸ்.பி தலைமையில் தனிப்படை அமைக்கப் பட்டுள்ளது என்று அம்மாநில உள்துறை அமைச்சர் நமச்சிவாயம் தெரிவித் துள்ளார்.

இது குறித்து புதுச்சேரி பொலிஸ் தலைமையகத்தில் அவர் செய்தியா ளர்களிடம் பேசுகையில்,

"முத்தியால்பேட்டை சிறுமி கொலை வழக்கில் 57 வயது முதியவர் மற்றும் 25 வயது மதிக்கத்தக்க இளைஞர் என இரு நபர்களை பொலிஸார் கைது செய் துள்ளனர் . இதில் மேலும் யாரேனும் ஈடுபட்டுள்ளார்களா என்பது குறித்து விசாரணை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்த வழக்கு விசாரணை தொடர்பாக சிரேஷ்ட எஸ்.பி கலைவாணன் தலை மையில் தனிப்படை அமைக்கப்பட் டுள்ளது. தொடர்ந்து புதுச்சேரி மாநிலத் தில் சட்டம் – ஒழுங்கை பாதுகாக்கவும், போதைப் பொருள் நடமாட்டத்தை கட்டுப் படுத்தவும், அதில் தொடர்புடையவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கவும் பல்வேறு அறிவுறுத்தல்கள் பொலிஸ் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. உடனடியாக அத்தகைய நடவடிக் கையை பொலிஸ் எடுக்கும்.

பொலிஸ் அதிகாரிகள் யாரேனும் குற்றச் செயலில் ஈடுபடுவோருடன் தொடர்பில் இருந்தால் அவர்கள் மீது உடனடியாக அரசு துறை ரீதியான நடவடிக்கையை எடுக்கும். சிறப்பு நீதி மன்றத்தை பொறுத்தவரையில் சட்டத் துறை தான் முடிவு செய்ய வேண்டும். சிறுமி கொலை சம்பவத்தில் தொடர்புடை யவர்கள் மீது வன்கொடுமை தடுப்புச் சட்டம், கொலை உள்ளிட்ட என்னென்ன பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய் யப்படுமோ, அந்தப் பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்யப்படும்.

இந்த வழக்கை பொறுத்தவரையில் கைது செய்யப்பட்டவர்கள், சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்ய முயற்சித் துள்ளனர். அவ்வாறு முயலும்போது சிறுமி தடுக்க போராடியுள்ளார். இதில் அந்த சிறுமி கொலை செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட இருவரும் விசார ணைக்கு ஒத்துழைக்கவில்லை. தற் போதுதான் ஒத்துழைப்பு அளித்து உண்மையை சொல்ல ஆரம்பித்துள்ள னர். அதன் பிறகே நடவடிக்கையை தீவிரப்படுத்தியுள்ளோம். தொடர் விசாரணை செய்து மேலும் இதில் யார் யாருக்கெல்லாம் தொடர்பு இருக்கிறது என்பது கண்டறிந்து அவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கத்தான் தனிப்ப டையே அமைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் சி.சி.டி.வி. கெமரா காட்சிகள் போதுமான அளவில் கிடைக்கவில்லை. பொலிஸார் தொடர் நடவடிக்கையில்தான் ஈடுபட்டனர். மெத் தனமாக நடந்துகொள்ளவில்லை. கடந்த வாரம் கூட கடற்கரை வீதியில் குழந்தை கடத்தப்பட்டபோது காரைக்கால் வரை சென்று மீட்டு வந்தனர். ஆகவே, இந்த வழக்கில் தொடர்ந்து விசாரணை நடந்து வருகிறது. சம்மந்தப்பட்ட பொலிஸ் அதிகாரிகள் மீது துறை ரீதியாகவும் விசாரணை நடத்த உத்தரவிட்டுள் ளோம்." – என்றார்.

# இலங்கை தமிழர்களுக்கு புதிய வீடுகள் கையளிப்பு



தமிழ்நாடு – தர்மபுரி மாவட்டத்தின் இலங்கை தமிழர் முகாம்களிலுள்ள 168 பயனாளிகளுக்கு புதிய வீடுகளை வழங்கும் நிகழ்வு நேற்று நடைபெற் றது.

தர்மபுரி மாவட்ட ஆட்சியாளர் தலை மையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. இதன்போது, 8 கோடியே 40 லட்சம் இந்திய ரூபா மதிப்பிலான புதிய வீடுகள் சிறுபான்மை, வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ் தான் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் பன்னீர்செல்வம் ஆகியோ ரால் கையளிக்கப்பட்டன.

தர்மபுரி மாவட்டம் பாலக்கோடு வட்டத்தில் வசிக்கும் 80 பயனாளிகளுக் கும் நல்லம்பள்ளி ஒன்றியத்தின் பூவல்மடுவு இலங்கை தமிழர் முகாம் களில் வசிக்கும் 88 பயனாளிகளுக்கும் புதிய வீடுகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் மக்களவை, சட்ட மன்றம், உள்ளாட்சி அமைப்பு உறுப் பினர்கள், பொதுமக்கள் உள்ளிட் டோர் கலந்து கொண்டிருந்தனர்.

## அமெரிக்க ஜனாதிபதி தேர்தல்:
# குடியரசுக் கட்சி வேட்பாளருக்கான போட்டியிலிருந்து நிக்கி விலகினார்




அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுக்கான குடியரசுக் கட்சி வேட்பாளருக்கான போட்டியிலிருந்து நிக்கி ஹேலி விலகியுள்ளார்.

இது தொடர்பிலான அறிவிப்பை தென் கரோலினா மாநிலத்தின் தலைநகர் சார்ள்ஸ்டனில் நேற்று வெளியிட்டுள்ளார்.

இந்நிலையில், குடியரசுக் கட்சி வேட்பாளராக தனியொரு வேட்பாளராக முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் போட்டியிடுவார் என தெரிவிக்கப்படுகிறது.

மேலும், இதுவரை நடைபெற்ற குடியரசுக் கட்சியின் உட்கட்சித் தேர்தல்களில் வொஷிங்டன் டி.சி மற்றும் வேர்மண்ட் மாநிலத்தில் மாத்திரமே நிக்கி ஹேலி வெற்றியீட்டினார்.

இந்த நிலையில் அவர் இப்போட்டியிலிருந்து விலகுகிறேன் என்று அறிவித்துள்ளார்.



# சீன பாதுகாப்புத் துறைக்கு அதிகளவான நிதி ஒதுக்கீடு

சீனா பாதுகாப்புத் துறைக்கான தனது வரவு – செலவு திட்ட நிதி ஒதுக்கீட்டை 7.2 சதவீதம் அதிகரிப்பதாக அறிவித்துள்ளது.

அமெரிக்காவுடனும், தைவான், ஜப்பான் போன்ற அண்டை நாடுகளுடனும் பதற்றம் அதிகரித்து வரும் சூழலில், தனது இராணுவத்தை மேலும் நவீனமாக்குவதற்காக பாதுகாப்பு நிதி ஒதுக்கீட்டை சீனா அதிகரித்து வருகிறது.

சீன இராணுவத்துக்கு புதிய ஆயுதங்களை வடிவமைப்பதற்கான ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பணிகள், நவீன ஆயுதங்களை ஏனைய நாடுகளிடமிருந்து வாங்குவது ஆகியவற்றுக்காக சீனா செலவிடும் தொகையையும் கணக்கில் கொண்டால், வரவு – செலவு திட்ட ஒதுக்கீடு செய்யப்பட்டதைவிட பல மடங்கு தொகையை சீனா இராணுவத்துக்காக செலவிடுவதாகக் கூறப்படுகிறது.

ஏற்கெனவே, அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக உலகிலேயே மிக அதிக அளவு தொகையை (1.6 லட்சம் கோடி யூவான்) இராணுவத்துக்காக ஒதுக்கீடு செய்து வரும் சீனா, கடந்த ஆண்டும் இதே அளவுக்கு தனது பாதுகாப்பு நிதி ஒதுக்கீட்டை அதிகரித்தமை குறிப்பிடத்தக்கது.

# உலக பணக்காரர் பட்டியலில் எலான் மஸ்கை பின் தள்ளி ஜெஃப் பெசோஸ் மீண்டும் முதலிடம்



உலக பணக்காரர் பட்டியலில் அமேசான் நிறுவனர் ஜெஃப் பெசோஸ் மீண்டும் முதலிடம் பிடித்துள்ளார்.

இந்த பட்டியலில் டெஸ்லா நிறுவனர் எலான் மஸ்க் முதலிடம் வகித்து வந்தார்.

இந்நிலையில், நேற்று முன்தினம் எலான் மஸ்கை பின்னுக்குத் தள்ளி ஜெஃப் பெசோஸ் முதலிடம் பிடித்துள்ளார்.

Bloomberg நிறுவனத்தின் மதிப்பீட்டின் படி, எலான் மஸ்கின் நிகர சொத்து மதிப்பு 198 பில்லியன் டொலராக குறைந்துள்ள நிலையில், ஜெஃப் பெசோஸின் சொத்து மதிப்பு 200 பில்லியன் டொலராக உயர்ந்துள்ளது.

முன்பு, எலான் மஸ்க் உடன் ஒப்பிடுகையில், சொத்து மதிப்பில் ஜெஃப் பெசோஸ் மிகவும் பின்தங்கி இருந்தார்.

2022 ஆம் ஆண்டுக்குப் பிறகு அமேசான் பங்கு மதிப்பு இருமடங்கு உயர்ந்தது. அதேசமயம், 2021-க்குப் பிறகு எலான் மஸ்கின் சொத்து மதிப்பு 50 சதவீதம் சரிவைக் கண்டது. இதனால், ஜெஃப் பெசோஸின் சொத்து மதிப்பு எலான் மஸ்கை நெருங்கியது. இந்நிலையில், தற்போது எலான் மஸ்கை பின்னுக்குத் தள்ளி ஜெஃப் பெசோஸ் முதல் இடம் பிடித்துள்ளார்.

இப்பட்டியலில் Louis Vuitton நிறுவனத் தலைவர் பெர்னார்ட் அர்னால்ட் 197 பில்லியன் டொலர் சொத்து மதிப்புடன் மூன்றாம் இடத்திலும், / பேஸ்புக் நிறுவனர் மார்க் சக்கர்பெர்க் 179 பில்லியன் டொலர் சொத்து மதிப்புடன் நான்காம் இடத்திலும், மைக்ரோசாஃப்ட் நிறுவனர் பில்கேட்ஸ் 150 பில்லியன் டொலர் சொத்து மதிப்புடன் ஐந்தாம் இடத்திலும் உள்ளனர்.

115 பில்லியன் டொலர் சொத்து மதிப்புடன் முகேஷ் அம்பானி 11 ஆம் இடத்திலும் 104 பில்லியன் டொலர் சொத்து மதிப்புடன் கௌதம் அதானி 12 ஆம் இடத்திலும் உள்ளனர்.

# நாட்டின் பொருளாதாரம் வலுவடைந்திருப்பதால் அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன

## இராஜாங்க அமைச்சர் அருந்தி பெர்னான்டோ தெரிவிப்பு



"மிக அவசியமான அபிவிருத்தி வேலைத்திட்டங்களை அரசாங்கம் தற்போது ஆரம்பித்துள்ளது. இந்தியா, சீனா மற்றும் பல மேற்கத்திய நாடுகள் இந்த நாட்டில் முதலீட்டுக்காக முன் வந்துள்ளன."

– இவ்வாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்ணான்டோ தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"பொருளாதார நெருக்கடியால், கடந்த காலத்தில் எவ்விதமான அபிவிருத்தித் திட்டங்களும் செயல்படுத்தப்படவில்லை. ஆனால், தற்போது பொருளாதாரம் ஓரளவு வலுவான நிலைமைக்கு திரும்புவதால் அவசியமான அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கொழும்பிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் சீன உதவியின் கீழ் 2000 வீடுகளை அமைப்பதற்கான திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது. மேலும், மாடிக் குடியிருப்புகளில் வசிப்போருக்கு உரிமத்தை வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

அத்துடன், 'மலைநாட்டு தசாப்தம்' அபிவிருத்தித் திட்டத்தின் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கரையோர மற்றும் தாழ்நில அபிவிருத்தி நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதன் கீழ் நாடளாவிய ரீதியில் பிரதேச செயலக மட்டத்தில் பல அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

வர்த்தக நடவடிக்கைகளில் இருந்து விலகும் கொள்கையின் கீழ் கொழும்பு ஹில்டன் ஹோட்டலைத் தனியார் துறை முதலீட்டிற்காக வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அதன்படி ஏற்கனவே நான்கு வர்த்தகர்கள் அதற்காக முன் வந்துள்ளனர்.

ஆனால் அரசாங்கம் எதிர்பார்க்கும் முதலீடு நிச்சயமாக அங்கு கிடைக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறோம் .மேலும் எமது அமைச்சின் கீழ் உள்ள ஹயாத் ஹோட்டலின் 50 வீத பணிகள் நிறைவடைந்துள்ளன. அதற்கான முதலீட்டாளரையும் தேடுகிறோம். டி.ஆர்.விஜேவர்தன மாவத்தையின் தாமரை கோபுரத்திலிருந்து லேக்ஹவுஸ் சுற்றுவட்டம் வரையிலான இரு பக்கங்களையும் அபிவிருத்தி செய்வதற்கு முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கொழும்பில் உள்ள பேர வாவிகளை சுத்தப்படுத்தும் ஜப்பானிய அரசாங்கத்துடனான திட்டத்தின் ஆரம்ப கட்ட பணிகள் தற்போது நிறைவடைந்துள்ளன. அடுத்த மாதம் இத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

சாதாரண மழைக் காலத்திலும் வெள்ளத்தில் மூழ்கும் கொழும்பு நகரில் வெள்ளப்பெருக்கை கட்டுப்படுத்துவதற்கான திட்டத்தையும் எமது அமைச்சு வகுத்துள்ளது. நிதி ஒதுக்கீடுகளின் அடிப்படையில் எதிர்கால பணிகளை முன்னெடுக்க எதிர்பார்க்கிறோம்.

அதேபோல் இந்தியா, சீனா மற்றும் பல்வேறு தேற்கத்திய நாடுகளும் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள முன்வந்துள்ளன. நாட்டின் பொருளாதார நிலைமை வலுவடைந்திருப்பதால் முதலீட்டாளர்கள் பார்வை இலங்கையின் மீது திரும்பியுள்ளது. – என்றார்.

# வல்வை முதியோர் இல்லத்தின் செயற்பாடுகளை உடனடியாக நிறுத்துமாறு ஆளுநர் பணிப்புரை!

யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையில் எவ்வித அனுமதியும் இன்றி செயற்படும் முதியோர் இல்லத்தின் நடவடிக்கைகளுக்குத் தடைவிதிக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் விடுத்த பணிப்புரைக்கு அமைய, ஆளுநரின் செயலாளரால் பருத்தித் துறை பிரதேச செயலாளருக்கு கடிதம் ஊடாக அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், வல்வை முதியோர் இல்லம் எவ்வித வசதிகளும் இன்றியும் இதுவரை பதிவு செய்யாமலும் இயங்கியமை தொடர்பில் உரிய சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வல்வை முதியோர் இல்லம் தொடர்பில், வடக்கு மாகாண ஆளுநரின் நேரடி கண்காணிப்பின் கீழ் இயங்கும் 'அபயம்' – 24 மணித்தியால குறைகேள் வலையமைப்பிற்கு முறைப்பாடு கிடைத்தது. இந்த முறைப்பாடு தொடர்பில் பருத்தித்துறை பிரதேச செயலாளரிடமிருந்து பெறப்பட்ட கள விஜய அறிக்கை ஆளுநரிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

விடயங்களை ஆராய்ந்த வடக்கு மாகாண ஆளுநர் அந்த முதியோர் இல்லம் தொடர்பில் உடனடியாக நடவடிக் கைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தியுள்ளார்.



# இன்றைய ராசி பலன்கள் - 07.03.2024




இன்று நீங்கள் நம்பிக்கை நிறைந்து காணப்படுவீர்கள். உங்களின் கடின முயற்சி மூலம் வெற்றி பெறுவர்கள். புதுமையாக யோசித்து புதிய கருத்துக்களை உருவாக்க இது உகந்த நேரம்.

பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது. உங்கள் பணிகளில் நீங்கள் மும்மரமாக இருப்பீரகள். சிறப்பக திட்டமிட்டு உங்கள் பணிகளை முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நகைச்சுவையான உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். இந்த உணர்வால் இன்று நல்லிணக்கமும் திருப்தியும் காணப்படும்.

இன்று பணம் சேமிப்பதற்கு சாதகமான நிலை காணப்படும். இன்று நல்ல வாய்புகள் காணப்படுவதால் கணிசமான தொகை வருவதற்கான வாய்ப்பு உள்ளது.

இன்று உங்களின் ஆற்றல் சிறப்பாக இருக்கும்.




இன்றைய நாள் சுமாராக இருக்கக் காண்பீர்கள். நீங்கள் விரும்பிய பலனை அடைய சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்க நேரலாம். உங்கள் இலக்குகளை எளிதாக அடைவது சிறிது கடினமாக இருக்கும்.

உங்கள் பணிகள் சுமூகமாக நடைபெற மற்றும் பணியில் நற்பலன் காண உங்கள் புத்திசாலித் தனத்தைப் பயன்படுத்த வேண்டும்.

உங்கள் மனதில் சில குழப்பங்கள் காணப்படும். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் தேவையற்ற வாக்குவாதங்கள் ஏற்படும். எனவே பொறுமையை பராமரிக்க வேண்டும்.

இன்று சற்று இறுக்கமான நிதிநிலைமை காணப்படும். குழந்தைகளின் நலன் போன்ற அதிகரிக்கும் பொறுப்புகளுக்கு செலவு செய்ய நேரும். சளி ஏற்பட வாய்ப்புள்ளது. குளிர்ச்சியான உணவு வகைகளை தவிர்த்தல் நல்லது.




இன்று துடிப்பான நாளாக இருக்காது. நீங்கள் தைரியமாக நேர்மறை எண்ணத்துடன் இருக்க வேண்டும். உணர்ச்சிவசப்படாமல் இருக்க வேண்டும். அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். எந்த விஷயத்தையும் நட்பு முறையோடு அணுக வேண்டும்.

கவனக்குறைவு காரணமாக பணியில் தவறுகள் நேர வாய்ப்பு உள்ளது. முறையாக திட்டமிட்டு கவனமாக பணியாற்றவும்.

உங்களின் இனிமையான அணுகுமுறை மூலம் உங்கள் நாளை நீங்கள் சிறப்பாகஆக்க வேண்டும். உங்கள் துணையுடன் அன்பை வளர்க்க முயலுங்கள். இதனால் மகிழ்ச்சி நிலவும். இன்று பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளது. உங்கள் குடும்பத்துக்காக தேவையற்ற செலவு மேற்கொள்ள வேண்டியிருக்கும்.




இன்று உங்கள் நண்பர்கள் மற்றும் பரிச்சயமானவர்களின் நம்பிக்கையைப் பெறுவீர்கள். உங்கள் இனிமையான வார்த்தைகளால் உங்கள் நண்பர்களை மகிழ்விப்பீர்கள். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நல்ல பலனளிக்கும்.

பணியில் உங்கள் செயல்திறன் உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும். பணியில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உங்கள் துணையிடம் உங்கள் மீது நல அபிப்பிராயம் ஏற்படும்.

உங்களின் சம்பாதிக்கும் ஆற்றல் உயரும். நிதி நிலைமை செழிப்பாக இருக்கும்.

உங்களின் சந்தோஷமான மனநிலை காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.




இன்றைய நாள் சிறப்பாக இருக்கக் காண்பீர்கள்.முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள். பக்தியில் ஈடுபடுவதற்கும் இறை வழிபாட்டிற்கும் உகந்த நாள். கடின உழைப்பின் மூலம் நல்ல பலன்கள் கிடைக்கும்.

பணியிடத்தில் வளர்ச்சி காணப்படும். உங்கள் திறமைகளை பணியிடத்தில் நிரூபிப்பீர்கள்.

உங்கள் துணையுடனான அணுகுமுறையில் நேர்மை காணப்படும். இதனால் உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான உறவை உருவாக்க முடியும்.

இன்று பணப்புழக்கம் அதிகமாக இருக்கும். உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள நீங்கள் தேவைப்பட்டால் கடன் பெறலாம்.

இன்று மிகுந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள். எனவே ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று நீங்கள் ஆறுதல் தேடி கோவிலுக்கு செல்வீர்கள். இன்றைய நாள் சீராக செல்ல நீங்கள் சற்று விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும்.பிரார்த்தனை மேற்கொள்வது ஆறுதல் அளிக்கும்.

உங்கள் பணிகளை உரிய முறையில் மேற்கொள்ள திட்டமிட்டு செயல் புரிய வேண்டும். பணியில் கெட்ட பெயர் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே கவனமாகப் பணிகளைக் கையாள வேண்டும்.

குறைவான புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். இத்தகைய உணர்வை தவிர்த்து மகிழ்ச்சியை பராமரிக்க வேண்டும்.

இன்று பண வரவு செலவு இரண்டும் காணப்படும். உங்கள் மதிப்பு வாய்ந்த பொருள்களைப் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டியது அவசியம்.




இன்று நீங்கள் ஓய்வாக இருக்க வேண்டிய நாள். மகிழ்ச்சியை அளிக்கும் சூழ்நிலை இருந்தாலும் நீங்கள் அமைதியின்றி காணப்படுவீர்கள். இது உங்களை பாதிக்கும். நல்ல பலன்களைக் காண மகிழ்ச்சியாகவும் நம்பிக்கையுடனும் இருங்கள்.

பணியிடத்தில் ஸ்திரமான சூழல் இருக்காது. பணியின்போது தவறுகள் நேர வாய்ப்புள்ளது.

உங்கள் அன்பான உணர்வுகளை உங்கள் துணையுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும். இன்றைய நாளை இனிமையாக மகிழ்ச்சியாக வைத்திருக்க இது மிகவும் அவசியம்.

இன்று பணம் எளிதில் கிடைக்காது. பணம் இழப்பதற்கான வாய்ப்பு உள்ளது. பணம் சம்பாதிப்பதற்கான வாய்ப்பு குறைவு.




இன்று முன்னேற்றகரமான நாளாக இருக்கும்.உங்கள் இலக்குகளை அடைவதற்கு இன்று கிடைக்கும் வாய்ப்புகளை பயன்படுத்திக்கொள்ளுங்கள். உங்களின் இனிமையான தொடர்பாடல் திறமை காரணமாக இன்று நீங்கள் வெற்றி பெறுவீர்கள்.

பணியிடத்தில் வளர்ச்சிக்கான வாய்ப்பு உள்ளது. பயணம் அல்லது வெளிநாட்டுக்குச் செல்லும் வாய்ப்பு உள்ளது. உங்கள் சுய வளர்ச்சிக்கு இன்றைய நாளை பயன் படுத்திக்கொள்ளுங்கள்.

இன்று சமநிலையான மன நிலையில் காணப்படுவீர்கள். உங்களின் இனிமையான வார்த்தைகள் மூலம் உங்கள் துணையின் இதயத்தில் இடம் பெறுவீர்கள். பண வரவு அபரிமிதமாக இருக்கும். குடும்பத்திற்கும் பணம் செலவு செய்வீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 07.03.2024

## தனுசு

இன்றைய நாள் உங்கள் பொறுமையை சோதிக்கும் நாள். உங்களின் எதிர்மறை சிந்தனை காரணமாக நீங்கள் பாதகமான விளைவுகளை சந்திப்பீர்கள். பிரார்த்தனை மற்றும் தியானம் நல்ல பலனளிக்கும்.

சக பணியாளர்களுடன் நல்லுறவு காணப்படாது. பணியிடச் சூழல் சிறப்பாக இருக்காது.

உங்களிடம் மனக்குழப்பம் காணப்படும். அதனை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். உங்கள் துணையை மகிழ்ச்சியாக வைத்திருக்க இத்தகைய உணர்வை தவிர்க்க வேண்டும்.

உங்கள் விருப்பங்கள் நிறைவேற இன்று உகந்த நாள் அல்ல. நிதி வளர்ச்சியில் கட்டுப்பாடு காணப்படும். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

ஆரோக்கியம் மகிழ்ச்சிகரமாக இருக்காது.

## கும்பம்

நீங்கள் பாதுகாப்பின்மை உணர்வுடனும் தனிமையாகவும், அவநம்பிக்கையுடனும் காணப்படுவீர்கள். நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரலாம்.

இன்று அதிகப் பணிகள் காணப்படும். முன்கூட்டியே திட்டமிட்டு பணி புரிவதன் மூலம் சிறந்த பலன் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் உங்கள் கருத்துகளை வெளிப்படையாக பகிர்ந்து கொள்ள வேண்டும். இதன் மூலம் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்தலாம்.

இன்று நிதி நிலைமை சிறப்பாக இருக்காது. மருத்துவ செலவிற்காக நீங்கள் கூடுதல் பணம் செலவு செய்ய நேரும்.இன்று நீங்கள் ஆரோக்கியத்தில் கவனம் கொள்ள வேண்டியது அவசியம். மூட்டுக்களில் திடீர் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

## மகரம்

நீங்கள் நன்மை அடைந்தாலும் அதில் உங்களுக்கு திருப்தி இருக்காது. வெறுமையை உணர்வீர்கள். இன்று உங்கள் இலக்குகளை அடைவதில் தடைகள் காணப்படும்.

உங்கள் பணிகளை மேற்கொள்வதைக் கடினமாக உணர்வீர்கள். பணிகளை குறித்த நேரத்தில் மேற்கொள்வதிலும் தாமதம் காணப்படும்.

உறவில் காணப்படும் கருத்து வேறுபாடு காரணமாக உங்கள் துணையுடன் புரிந்துணர்வுப் பிரச்சினை காணப்படும்.

நிதி நிலைமை அவ்வளவு சிறப்பாக இருக்காது. அதிர்ஷ்டம் உங்களுக்கு சாதகமாக இல்லாத காரணத்தால் பண வரவு காணப்படாது.

மன உளைச்சல் காரணமாக இன்று நீங்கள் தொடை வலியால் அவதிப்பட நேரலாம்.

## மீனம்

இன்று நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். உங்கள் இலக்குகளை அடைவதற்கு அதிர்ஷ்டம் உங்களுக்கு அனுகூலமாக இருக்கும். அது உங்களுக்கு மனநிறைவை அளிக்கும். மூத்தவர்கள் மற்றும் நலம் விரும்பிகளின் ஆதரவைப் பெறுவீர்கள்.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும்போது புத்துணர்ச்சியுடன் காணப்படுவீர்கள். உங்களின் திறமைக்கு மேலதிகாரிகளின் பாராட்டுக் கிடைக்கும்.

இன்று உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். உங்கள் வாழ்க்கை பற்றி உங்கள் துணையிடம் கலந்தாலோசிப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் பணம் திருப்திகரமாக இருக்கும். உங்கள் நண்பர்களிடமிருந்து எதிர்பாராத பரிசாக பணம் கிடைக்க வாய்ப்புள்ளது.

